# ★ ஜனாதிபதி செயலகத்தில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு) பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியிலே திருமதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என்று பி. பி. ஸி.

(6ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 27 இதழ் 282
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 13-11-1994

## பிரதமராக ஸ்ரீமா நாளை பதவியேற்பு

[கொழும்பு[ நாட்டின் புதிய பிரதமராக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாளைகாலை பதவியேற்கவுள்ளார். இதையடுத்து புதிய அமைச்சரவையும் அறிவிக்கப்பட்டவுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

★ 1,200 பேருக்கு

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்) தமிழீழ மீட்பு நிதிக்கு கடன் கொடுத்து உதவியவர்களில் 1994 மாவீரர் வாரத்தில் மீளளிப்பதற்கென தேர்ந்து எடுக்கப்பட்ட 1200 பேருக்கு கடன் மீளளிப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

## ஆடம்பரமற்ற முறையில்

# நாட்டின் புதிய ஜனாதிபதியாக சந்திரிகா நேற்று பதவியேற்ருர்

## - கொட்டும் மழையில் மரியாதை அணிவகுப்பு -



[கொழும்பு]
இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது பெண் ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா நேற்றுக் காலை மிக எளிமையான முறையில் பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவியேற்ருர்.

[2ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர்கள் பதவியிழப்பு நாளை புதிய அமைச்சரவை?

[கொழும்பு] ஜனாதிபதி பதவி ஏற்பதற்காக திருமதி சந்திரிகா தனது பிரதமர் பதவியை ராஜினுமா செய்ததைத் தொடர்ந்து அமைச்சரவையும் செயலிழந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

புதிய அமைச்சரவை நாளை ஜனாதிபதி சந்திரிகா முன்நிலையில் பதவிப் பிரமாணம் செய்து பதவியேற்கவுள்ளதால் இதுவரை அமைச்சராக இருந்த அனைவரினதும் பதவிக்காமுலம் முடிவடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுஜனாதிபதி நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா [illegible]ஸநாயக்கா அரசியலிலிருந்து ஓய்வு?

[கொழும்பு] திருமதி சிறிமா திஸாநாயக்கா அரசியலிலிருந்து ஓய்வுபெறப்போவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக இவர் போட்டியிட்டார்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை விட திருமதி திஸாநாயக்கா 20 லட்சம் குறைவான வாக்குகளைப் பெற்றது தெரிந்ததே.

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்ட அவரது கணவரான காமினி திஸாநாயக்காவின் இடத்தை நிரப்புவதற்காக ஐ. தே. க. வின் ஜனாதிபதி வேட்பாளராக கட்சி அவரைத் தெரிவு செய்திருந்தது அறிந்ததே.

(இ-சி)

## ரூபவாஹினி வசந்தராஜா மீது பலத்த குற்றச்சாட்டு

(கொழும்பு) ரூபவாஹினி போன்ற எலக்ரோனிக் தொடர்பு சாதனங்களை பொதுசன ஐக்கிய முன்னணி ஜனாதிபதி தேர்தலில் முறைகேடாகப் பாவிக்கவில்லையென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுஜனாதிபதியாக பதவியேற்றபின்பு முதன் முதலாக நடந்த பத்திரிகையாளர்

(6-ம் பக்கம் பார்க்க)

தொடர்பு சாதனங்களில்

## முறைகேடு எதனையும் [illegible] ச. மு. செய்யவில்லை

(கொழும்பு) கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பை பயன்படுத்தி அரசியல் லாபம் பெற முயன்றது போன்று, என்மீது குற்றம் சுமத்தி அரசியல் லாபம் தேட சிலர் முயற்சி செய்தார்கள் என்று ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் திரு. பி. வசந்தராஜா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ரூபவாஹினி பொதுசன ஐக்கிய முன்னணிக்கு சார்பாகவும், வசந்தராஜா சில நிகழ்ச்சிகளை அந்தக் கட்சிக்கு பயன்படக்கூடிய வகையில்

[6ம் பக்கம் பார்க்க]

## அடுத்த கட்டபேச்சு குறித்து கூற சந்திரிகா மறுப்பு!

(கொழும்பு) நாட்டில் விரைவில் சமாதானத்தை ஏற்படுத்த விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து சமாதானப் பேச்சுக்கள் நடாத்தப்படும் எனக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா அடுத்த கட்டப் பேச்சு எப்போது ஆரம்பமாகுமென கூற மறுத்து விட்டார்.

ஜனாதிபதியாக பதவியேற்றபின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தமது நிலைப்பாட்டை தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா அங்கு தொடர்ந்து கூறியதாவது:

அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதானப் பேச்சு

(6-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்

– ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு) மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்வதற்கானசேவையில் என்னை அர்ப்பணிக்கப் போகிறேன். அச்சமும் பயமும் ஒழிக்கப்படும், அதிகார துஷ்பிரயோகம் நீக்கப்படும். நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படுத்த சகல முயற்சிகளும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்.

(2ம் பக்கம் பார்க்க)

★ பாதுகாப்பு காரணமாக

## 7 லட்சம் ஐ.தே.க. வினர் வாக்களிக்கவில்லை!

(கொழுப்பு) ஜனாதிபதி தேர்தலில் 7 லட்சம் ஐ. தே. கட்சி வாக்காளர்கள் பாதுகாப்பின் நிமித்தம் வாக்களிக்கச் செல்லவில்லை. அத்தோடு திருமதி சிறிமா திசநாயக்காவை குறுகிய காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் நிறுத்தியமை போன்றவைதான் ஜனாதிபதி தேர்தலில் ஐ. தே.கட்சி தோற்றத

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சாளி விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள சாளி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு விலாசம்:செ. யோகராஜா, 49/4சிரும்பியடி லேன், யாழ்ப்பாணம். [ஸ்ரீதர் படமாளிகை பின்பக்கம்] [சி- 1311]

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1313)


# ஆசிரியர்களுக்கு விசேட மருத்துவ காப்புறுதித்திட்டம்

(உடுவில்)

அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு விசேட மருத்துவக்காப்புறுதித் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவுள்ளது.

இக்காப்புறுதித்திட்டத்தினை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அமுல் செய்யவுள்ளது.

இவ்விசேட மருத்துவக்

(5ம் பக்கம் பார்க்க)

## ஆடம்பரமற்ற

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் திருமதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

நாட்டில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற உன்னத இலட்சியத்தைக் கருத்திற்கொண்டு, பொ. ச. மு வுக்கு இத்தகைய மகோன்னத வெற்றியை நாட்டு மக்கள் அளித்துள்ளனர். அவர்கள் அளித்த ஒவ்வொரு வாக்கும், மாற்றத்திற்குரிய வாக்காக இருந்தது.

வன்செயல்களும், அச்சம் நிறைந்த சூழ்நிலையும் நிராகரிக்கப்படவேண்டும் என மக்கள் முக்கியமாக விரும்பியுள்ளனர். உணர்ச்சியற்ற படுகொலைகளையும், தங்களால் நேசிக்கப்பட்டவர்கள் கடத்திச் செல்லப்பட்டதையும் மௌனத்தைக்கடைப்பிடித்து ஏற்றுக்கொண்டனர்.

ஏறத்தாழ 20 வருடங்களாக மனித உயிருக்கு இருந்த மதிப்பு இல்லாமற் போயிற்று. அச்சம் நிறைந்த நடவடிக்கைகள் நாட்டில் தலைதூக்கின. எவ்விதத் தடையுமின்றி அவை அழிவுப் பாதையில் முன்னேறிச் சென்றன. குறுகியதும், சுயநலம் கொண்டதுமான இலக்கை அடைவதற்குரிய ஒரே வழியாக அரசியல் அதிகாரத்தை உணர்ச்சியற்ற ஆட்சியினர் கொண்டிருந்தனர்.

ஒழுக்க நெறி, சமத்துவம், நீதி நெறி ஆகிய சகல அம்சங்களையும் அந்த ஆட்சி மீறியது. நடைமுறைப் பண்புகளும் பெறுமானங்களும் இல்லாத சூழ்நிலையில் பாதுகாப்புத் தேடிய ஒரு சமுதாயத்தை அந்த ஆட்சி விட்டுச் சென்றது. சமாதானத்திற்கும், மனிதப் பெறுமானங்களுக்குமென மக்கள் வாக்களித்துள்ளனர்.

துப்பாக்கிவேட்டின் சக்தியை வாக்குச் சீட்டின் பலத்தால் தோற்கடிக்க முடியும் என்று உலக நாடுகளுக்கு அவர்கள் திட்டவட்டமாக நிரூபித்துள்ளார்கள். வன்செயல்களைக் கைவிட்டு, சுதந்திரம், ஜனநாயகப் பண்புகள் சகலருக்கும் சுபீட்சம் என்ற கொடியை ஏந்திச்செல்வதென இந்த நாட்டு இளைஞர்கள் அனைவரும்இணங்கியுள்ளனர், இவை அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்றவகையில் நாட்டில் வாழும் இளைஞர்கள் அனைவரும் என்மீது வைத்த நம்பிக்கைக்கு நாம் அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

நாட்டு மக்கள் சமாதானத்தில் எவ்வளவுதூரம் அக்கறை காட்டியுள்ளார்கள் என்பதை அவர்கள் அளித்த வாக்குகள் எவ்வித சந்தேகமுமில்லாமல் நிரூபிக்கின்றது. பிரச்னையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருக்கும் மரியாதை கிடைக்கும் விதத்தில் சமாதானம் ஏற்படுவது அவசியமாகும். எனது அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபடும்.

சமாதானத்தை அடைவதற்கான மார்க்கம் கஷ்டமானதும் கடினமானதுமாகும். சிங்களமக்களின் உரிமைகளை பாதுகாத்து பலப்படுத்தும் அதேசமயத்தில் சகல சமூகத்தினரதும் பெருந்தன்மை, சுயமரியாதை, சமஅந்தஸ்து என்பனவற்றை அங்கீகரிக்கும் விதத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிஅமைந்திருக்கும் என்பதை நாம் நிச்சயித்துக்கொள்வோம்.

அரசியல் வன்செயல் நீக்கப்படுவதற்கும் அச்சமான சூழ்நிலை நீக்கப்படுவதற்கும் கௌரவம்,மரியாதை என்பன மீண்டும் ஏற்படுத்தப்படுவதற்கும் அரசு எடுத்த நடவடிக்கைகளை நாட்டு மக்கள் திட்டவட்டமான விதத்தில் அங்கீகரித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையின் தீய விளைவுகளை மக்கள் உணர்ந்துள்ளனர். அதே நேரத்தில் ஜனநாயக வழிமுறையிலான வாழ்க்கையின் சிறப்பையும் அவர்கள் அறிந்துள்ளார்கள். எனவே இந்த நாட்டின் அரசியல் யாப்பிலிருந்து இந்த இருண்டபகுதி நீக்கப்படும். வாழ்க்கை செலவின் அதிகரிப்பினாலும் வேலைவாய்ப்பின்மையாலும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கிவரும் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பது சாத்தியமாகும் எனவும் கூறினார். (சி)

# நீச்சல் வீரனுக்கு முதல்வர் நிதியுதவி

(சென்னை)

தமிழகத்தில் இளம் நீச்சல் வீரர் குற்றாலேஸ்வரனுக்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா 1 இலட்சத்து 48 ஆயிரத்து460 ரூபாவுக்கான காசோலையை நேற்று முன்தினம் வழங்கினார்.

ஆஸ்திரேலியாவின் 'போல் மென்ட்'' கால்வாயை நீந்திக் கடக்கும்முயற்சிக்காக தனக்கு நிதியுதவி வழங்கும்படி குற்றாலேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதல்வர் இந்நிதியுதவியை வழங்கினார். -க-இ

# கிராமிய மட்டத்தில் விளையாட்டு கழகங்கள்

(உடுவில்)

மாகாணங்களில் அடிமட்டத்தில் இருந்து விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதுவரைகாலமும் நகரப்புறங்களில் தான் அமைக்கப்பட்டு வந்த விளையாட்டுக் கழகங்கள் கிரமிய மட்டத்திலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிராமசேவையாளர் பிரிவுகள் தோறும் விளையாட்டுக் கழகங்கள் நிறுவப்படவுள்ளன. இவ்வாறு விளையாட்டுக் கழகங்கள் அமைக்கப்பட்டவுடன் அவற்றுக்கு வேண்டிய மைதான வசதிகள், விளையாட்டு உபகரணங்கள் போன்றன வழங்கப்படும் எனவும் தெரியவருகின்றது. -109

## சமாதானம் வேண்டி வழிபாடு

(அரியாலை)

நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி செப வழிபாடுகள்ஆலயங்களிலும் நடைபெற்று வருகின்றன.

சனிக்கிழமைகளில் யாழ். இராசாவின்தோட்டம் அருள் மாதா ஆலய தில் விசேட செப வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. -59

## தீபத் திருநாள்

(அரியாலை)

இந்துக்களின் முக்கிய பண்டிகையான திருக்கார்த்திகை தீபத்திருநாள் எதிர்வரும் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. அன்றையதினம் இல்லங்கள், இந்து ஆலயங்கள் ஆகியவற்றில் தீபங்கள் ஏற்றி வைக்கப்படும். —59

## சமாதான முயற்சிகளை

(1 ம் பக்கத்தொடர்சசி)

இவ் வைபவம் முன்னாள் நாடாளுமன்ற கட்டிடமான ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக்காலை 11-10 மணியளவில் ஆடம்பரமற்ற முறையில் மிகவும் அடக்கமாக நடைபெற்றது.

பதவியேற்பு நடைபெற முன்னர் ஜனாதிபதி செயலக மண்டபத்தில் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்கள் காலை 10-80 மணியளவில் தத்தமது ஆசனங்களில் வந்து அமர்ந்துகொண்டார்கள். மண்டபத்தின்மேல் மாடியில் வெளிநாட்டு ராஜதந்திரிகளும், அரசியல் வாதிகளும் நிறைந்திருந்தார்கள்.

ஜனாதிபதியின் தாயார் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதியின் சகோதரி சுனேத்ரா ஆகியோரும் அமர்ந்திருந்தனர்.

முற்பகல் 10 30 மணியளவில் பிரதம நீதியரசர் ஜீ. பி. டி. வி. சில்வா வைபவமண்டபத்துக்குவருகை தந்தார் இதனைத்தொடர்ந்து திருமதி சந்திரிகா 10-45 மணியளவில் தனது இரு பிள்ளைகளான யசோதரா, விமுக்தி சகிதம் ஜனாதிபதி செயலகத்துக்கு வந்தார். செயலகத்தின் பிரதான வாசலில் ஜனாதிபதி செயலாளர் விஜயதாஸாவும் அமைச்சர்தொடங்கொடவின் மகனும் மலர்ச்செண்டு கொடுத்துவரவேற்றார்கள்.

இதைத்தொடர்ந்து திருமதி சந்திரிகா 10-55 மணியளவில் மண்டபத்தினுள் பிரவேசித்தர் அப்போது 'சங்கொலி' முழங்கியது. இதைத்தொடர்ந்து ஜனாதிபதியின் செயலர் விஜயதாஸா திருமதி சந்திரிகா பதவிஏற்கும் நிகழ்வினை மும்மொழியிலும் பிரகடனப்படுத்தினர். இதைத் தொடர்ந்து 11 மணியளவில் திருமதி சந்திரிகாவும் மும்மொழிகளிலும் தமது பதவிப் பிரமாணத்தை வாசித்தார்.

11.05 மணியளவில் திருமதி சந்திரிகா சத்தியப்பிரமாணம் செய்தார். இதனையும் அவர் மும்மொழிகளிலும் வாசித்தார். இதன்பின் சரியாக 11-10 மணியளவில் ஜனாதிபதியாக பதவி ஏற்றார். இதற்குரிய பத்திரங்களை கையெழுத்திட்டு டரு ம நீதியரசரிடம கையளித்தார்.

தொடர்ந்து நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றினர் இவ் உரைகளை அவர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தினர். அவரது உரை முடிவடைந்ததும் அங்கு கூடியிருந்தவர்களுடன் சில நிமிடங்கள்உரையாடியபின்ந.பகல்12 மணியளவில் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னுள்ள திடலில் முப்படையினரின் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொள்வதற்காக வந்தார்.

வெளியில் பெரும் மழை பெய்த வண்ணமிருந்ததால் ஜனாதிபதி மரியாதை அணிவகுப்பை ஏற்க விஷேட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வை பார்வையிட ஆயிரக்கணக்கான மக்கள் கொட்டும் மழையிலும் காத்திருந்தனர். மண்டபத்திற்கு வெளியே வந்து செங்கம்பளத்தின் மீது நடந்துவந்து முப்படையினரதும் மரியாதை அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து படையினர் 21 பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்து ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தினர்.

இவ்வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது காலிமுகத்திடல் கடற்பரப்பில் பல பீரங்கிப் படகுகள் ரோந்து சுற்றிய வண்ணம் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தன.

ஜனாதிபதி மரியாதை அணிவகுப்பை ஏற்றபோது, கொட்டும் மழையில் நனைந்தவாறே அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதர்கள், ராஜதந்திரிகள், மக்கள் குழுமியிருந்தனர். அணிவகுப்பு முடிவடைந்ததும் ஜனாதிபதி அனைவருக்கும் கையசைத்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிகா சரியாக 12-10 மணிக்கு குதிரைப்படை முன்னால் அணிவகுத்துச் செல்ல, வீதியின் இருமருங்கிலும் இராணுவத்தினர் அணிவகுத்து நிற்க அலரி மாளிகை நோக்கிச் சென்றார். சி-வி


யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

மகாபொல கொடுப்பனவு

-0-0-0-0-0-0-

முதலாம் வருட மாணவர்களுக்கான 5-ம் தவணைப் பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 8-ம் தவணைப் பணமும் யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்.

(ஏ-4496)



உ

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு ஸ்ரீ வல்லீபுரநாதர் தேவஸ்தான
★ பாலஸ்தாபன கும்பாபிஷேக வைபவம் ★
நாளை 14-11-94 திங்கட்கிழமை
காலை 6-06 முதல் 6-20 வரையுள்ள சுபநேரத்தில்
பிரதிஷ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக்குருக்கள்
அவர்களால்
நடாத்தப்படவிருக்கிறது.
இதன்
★ மகா கும்பாபிஷேகம் ★
5-2-95 ஞாயிறு அன்று
ரேவதி நட்சத்திரம் கூடிய வேளையில்
இடம்பெறவுள்ளது.

★ இதற்கான நிதியுதவி செய்யவிரும்புபவர்கள் ஆலய பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்வதுடன் மேற்படி நிகழ்வுகளில் கலந்துகொண்டு இறையருள் பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தேவஸ்தான பரிபாலன சபை.
கோண்டாவில் கிழக்கு. (சி-1314)


## பரிசளிப்பு விழா

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய்-உடுவில் வீதியிலுள்ள தற்காலிகக் கட்டடத்தில் இயங்கிவரும் மாதகல் சென். யோசப் மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் வி.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாகவலி-வடக்கு கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. பாப்பா, இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அதிபர் சு.செல்லத்துரை ஆசியோர் கலந்துகொண்டனர். (72(

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு வலயங்களில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3-00 மணிக்கு சுன்னாகம் வலிகோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

# வங்கிச் சேவைகளை மக்கள் பயன்படுத்த வேண்டும்

## — மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் பேட்டி

தென் இலங்கையில் வங்கிகளின் சேவைகள் அளப்பரியது. வங்கிகள் மக்களின் தோழனாக, பாதுகாவலனாக, ஆசானாக செயல்பட்டு வருகின்றன. புதிய அரசாங்கமும் இந்த நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளுக்கு ஒரு விவசாய வங்கியை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இந்தத் தருணத்தில் துரதிர்ஷ்டவசமாக வடக்கு-கிழக்கு மக்கள், வங்கிகளின் அதிஉச்சப் பயன்களைப் பெறுவதற்கு இந்த யுத்தம் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றது. இருந்தபோதிலும் போர்க்காலத்தில் கூட மக்கள் வங்கி, ஒரு மட்டுப்படுத்தப்பட்ட சேவையூடாக மக்களுக்குப் பல சேவைகளைப் புரிந்து வருகின்றது.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளுக்குள்ளேயே வட பகுதி மக்களில் அநேகர் வங்கிகளின் சேவைகளை பெறுது இருக்கின்றார்கள். போரினால் பொருளிழந்து, அகதிகளாக இடம்பெயர்ந்து, வேலைவாய்ப்பின்றி இருப்போருக்கு கடன் கொடுத்து, தூக்கிவிட ஆயத்த நிலையில் மக்கள்வங்கி உள்ளது என்று யாழ். மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர் ஆர். அருளானந்தம் கூறினார். எத்தனையோ வேலைகளுக்கு மத்தியில் அவர் கூறிய கருத்துக்களை கேள்வி, பதில் வடிவத்தில் தருகின்றோம்.

கேள்வி: இந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் வடபிரதேச மக்களுக்கு, மக்கள்வங்கி எவ்வாறு பயன்பட்டு வருகின்றது?

பதில்: எமது வங்கி விவசாயம், சுயதொழில் வாய்ப்பு, வியாபாரம், சிறு கைத்தொழில்கள், சிறு விவசாயம், மீன் விற்பனை, கருவாடு விற்பனை, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்ற பல்வேறு அபிவிருத்திகளுக்கு சிறு கடன்களை வழங்கி வருகின்றது.

சாதாரணமாக 10,000 ரூபா கொடுக்கப்படுகின்றது. அந்தக் கடனை எடுப்பவர்கள் 18 மாதம், 24 மாதங்களில் திருப்பிக் கட்ட வேண்டும். சாதாரணமாக இந்தக் கடன் எடுக்கும் ஒருவர் மாதாந்தம் 500 ரூபாவும் சிறுவட்டியமான தொகையை திருப்பிச் செலுத்த வேண்டி வரும். இதைவிட வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு தற்காலிக மேலதிகப்பற்று கடன்களாக ஒரு லட்சம் தொடக்கம் 3 லட்சம் ரூபாவும் அதற்கு மேலாகவும் கடன்களாக வழங்கி வருகின்றோம்.

இந்தச் சிறுகடன் சேவைகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் செய்து வருகின்றோம். தமிழர் புனர்வாழ்வுக்கழகம், ஊற்று, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனங்களின் ஆலோசனையின் பேரிலும் பல கடன்கள் வழங்கியுள்ளோம். அகதி முகாம்களில் இருப்போருக்குக்கூட சுயதொழில் வாய்ப்புக்காக கடன் கொடுத்துள்ளோம். இப்படியாக கடன் எடுத்த அகதிகள் நூற்றுக்கு நாலு வீதம் குறித்த தவணையில் கடனை மீளச் செலுத்தியுள்ளார்கள்.

வன்னியில் செஞ்சிலுவைச் சங்கம் மூலமும் கிளிநொச்சியில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவும், கடன் கொடுத்து வருகின்றோம். கிளிநொச்சி மாவட்டத்தில் இரு முறைகளில் ஒரு கோடி ரூபா முதல் ஒன்றரைக் கோடி ரூபாவரை கடனாக வழங்கப்பட்டு பயனாளிகளால் திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 2 கோடி ரூபா வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பேட்டி கண்டவர்:
— மணிசேகரன் —

யாழ். மாவட்டத்தில் உருளைக்கிழங்கு அபிவிருத்திக்காக 300 விவசாயிகளுக்கு 40 லட்ச ரூபாவும், நெல் உற்பத்திக்கு 50 இலட்ச ரூபாவும் கொடுத்துதவியுள்ளோம். இந்தக் கடன்களை எடுப்பதில் பெரும் சிரமங்கள் இல்லை. எமது கடன் வழங்கும் முறைகள் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்தது. இந்தக் கடனை தவணை தப்பாத இரு விவசாயிகளின் கையெழுத்தோடு வழங்குகின்றோம். விவசாயத்தில் அழிவு ஏற்பட்டால் பயிர்க் காப்புறுதி ஊடாக, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அப்படி அழிவு ஏற்பட்டாலும்கூட, உண்மைநிலையைக் கருத்திற் கொண்டு அந்தக் கடன்களை இரண்டு, மூன்று போகத்தில் திருப்பிக் கட்டுமாறு கூறுகிறோம்.

இன்றுள்ள நிலையில் அதிகமான மக்கள் - விவசாயிகள். இவர்கள் கடன் பெறுவதற்கு வங்கியை அணுகவில்லை. இதை விருத்தி செய்வதற்காக பல வழிகளில் மக்கள் அறியும் பொருட்டு பல கருத்தரங்குகள் போன்ற நிகழ்வுகளை கிராம மட்டத்தில் மேற்கொள்ள இருக்கிறோம்.

கேள்வி: மக்கள் வங்கியில் அண்மையில் புதிதாக உத்தியோகத்தர்களை எடுப்பதற்காக பரீட்சைகள் நடத்தப்பட்டன. இதன் பிரகாரம் வடபகுதியில் எத்தனை பணியாளர்களை மக்கள் வங்கிச் சேவையில் இணைக்க இருக்கின்றீர்கள்?

பதில்: இம்மாதம் 15ம் திகதி தொடக்கம் 20பேருக்கு புதிதாக நியமனம் வழங்கவுள்ளோம். இன்னொரு தொகுதியினரைசுருக்கெழுத்தாளராக தெரிவுசெய்து மேலிடத்துக்கு அனுப்பியுள்ளோம். அங்கிருந்து அனுமதி கிடைத்ததும், அவர்களுக்கும்நியமனம் வழங்கப்படும்.

வடபிரதேச மக்கள் வங்கியின் சேவைகள் இந்தப்போர்க்காலச் சூழ்நிலையில் குறைந்துள்ள படியால்மேலும்பலரை நியமிக்க முடியாதுள்ளது. பல கிளைகள் மூடப்பட்டுள்ளன. அல்லது இன்னொரு கிளையுடன் சேர்க்கப்பட்டுள்ளன. சமாதான சூழ்நிலை யேற்பட்டு வங்கியின் சேவைகள் அதிகரித்தால் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு

இந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் நிர்வாகரீதியாக நாம் கூட போக்குவரத்து மின்சாரம், மின்சார உபகரணங்கள் பெறுவதற்கு பெரும் கஷ்டத்தை அனுபவிக்கிறோம். எமது 17 கிளைகள் இந்த யுத்தத்தினால் பாதிப்புள்ளாகி இருக்கின்றன. அதில் 10 கிளைகள் மிகவும் பாதிப்படைந்த நிலையில்உள்ளன சில கிளைகள் முற்றாக அழிந்து போயுள்ளன. எமது சேவைக்கு பல இடையூறுகள் இருந்தபோதிலும் நாம் சேவைகளைத் தொடர்ந்து செய்கின்றோம்,

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்காக ஒரு தொகுதி நோட்டுக்களை கொழும்பிலிருந்து தருவித்துள்ளோம். பழைய கிழிந்த நோட்டுகளை கொழும்புக்கு அனுப்பவுள்ளோம்.

கேள்வி: மக்கள் வங்கி வடபிரதேச முகாமையாளராகிய நீங்கள் மக்களுக்கு என்னகூற விரும்புகிறீர்கள்?

பதில்: மக்கள் வங்கி கிளைகளைமக்கள் உபயோகப்படுத்த வேண்டும். முகாமையாளர்களுடன் தொடர்புகொண்டு கடன் போன்ற சேவைகளைப் பெறவேண்டும் முக்கியமாக எடுத்த கடன்களை உரிய தவணைக்கு முன்பு திருப்பிச் செலுத்தவேண்டும் திருப்பிச் செலுத்துவதில் ஏதும் தடங்கல்கள் ஏற்பட்டால் வங்கிக்கு தெரியப்படுத்த வேண்டும். கடன்கள் பெற்ற சிலர் மீண்டும் வங்கியின் பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை. ஆனால் இன்று போர்க்காலச் சூழ்நிலையில் பெற்ற சிறுகடன்கள் ஒழுங்காகக் கட்டப்படுகின்றன.

-ம-சி

# சேது நாணயம் கண்டுபிடிப்பு

(சாவகச்சேரி)

கி, பி. 13—17ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் நல்லூரைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகளால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் "சேது" நாணயம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவிலை அண்டிய குடாப்பரப்பில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, நாகர்கோவில் பகுதியில் அண்மையில் இந்துப் பண்பாடு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆசிரியர் கனகராசாவின் ஆய்வின் போது இவை கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

குடாரப்பு என்னும் கிராமத்தில் குழிகளை வெட்டி ஆய்வு நடாத்தியபோது நொருங்கியநிலையிலிருந்த அழகிய மட்பாண்டப் பாத்திரம் ஒன்றில் இருந்து இவ்நாணயங்கள் சில கிடைக்கப்பெற்றன. செப்பு உலோகத்தில் காணப்பட்ட இவ்நாணயத்தில் அரசசின்னம், எருது, சூலம், குத்துவிளக்கு, மலர்கள் என்பனவும் தமிழில் 'சேது' என்றும் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அறியவருகிறது. (155-சி)

## கோழிகளுக்கு நோய்

(கொழும்புத்துறை)

தொடர்ந்து பெய்துவரும் பெருமழை காரணமாகக் கோழிகளுக்கு பல இடங்களில் ஒருவித தூக்கநோய் ஆரம்பித்து நான்கு ஆறுநாட்களில் கோழிகள் இறப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. -154

## கழிவு அகற்றும் வண்டில்கள்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் கழிவுகளை அகற்றும் வண்டில்களைச் சொந்தமாக மன்றத்துக்கு தயாரித்துள்ளதாக மாநகராட்சி மன்ற வட்டாத்திலிருந்து தெரியவந்துள்ளது. [154]

## ஒஸியின் இறுதிக்கிரியை நாளை நடைபெறும்

[கொழும்பு]

கொழும்பு கிரான்ட்பாஸ் குண்டு வெடிப்பில் படுகாயமடைந்து பின்மரணமான ஒஸி அபயகுணசேகரவின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை நடைபெறும். (இ)

## மரம் நடுகை

[கொழுப்புத்துறை]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் அண்மையில் வட்டு இந்துக்கல்லூரியிலும், வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்தகத்திலும் நிழல் தருமரக்கன்றுகளை நாட்டினர். (154]

# ஐ.தே.க. புதிய தலைவராக ரணில் இன்று பொறுப்பேற்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் புதிய தலைவராக திரு. ரணில் விக்கிரமசிங்க இன்று காலை சுபவேளையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்பார்.

ஐ. தே. கவின் தலைமைச் செயலகமான சிறிகோதாவில் இன்று நடைபெறவுள்ள வைபவமொன்றில் கலந்து இவர் தமது தலைமைப் பதவிப் கடமைகளை ஏற்றுக்கொள்வார். -இ

# சமூகத்திற்கு ஒவ்வாத ஜனாதிபதி ஆட்சிமுறை

— டி. பி. கூறுகிறார்

(லண்டன்]

இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியானது சமூகத்திற்கு ஒவ்வாதது பண்பிழந்தது, ஒழுக்கத்திற்கு மாறானது என முன்னாள் ஜனாதிபதிடி. பி. விஜேதுங்க வர்ணித்துள்ளதாக லண்டன் 'எக்கொனமிஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,

ஜனாதிபதிப்பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்றுச்செல்லுமுகமாக நடாத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு டி, பி. தெரிவித்துள்ளாராம்.

இதேவேளை சர்வவல்லமையுள்ள நிறைவேற்று அதிகாரம் வாய்ந்த ஜனாதிபதி முறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவரான முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தற்போது அரசியல் விமர்சகர்களால் கடும் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட்டுவருவதும் இங்கு குறுப்பிடத்தக்கது.

க-சி

# மரங்களை வளர்ப்பதனால்

## உணவுத் தேவைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பயன் தரு மரங்களை நாட்டிப் பேணிப்பாதுகாத்து வருவது தொன்று தொட்டு வரும் எமது பண்பாடாகும். இந்த வகையில் எமது முன்னோர் நீண்டகாலம் பாவனையில் இருக்கும் நிழல்தரு மரங்களை நாட்டிப்பேணிப் பாதுகாத்து வந்தார்கள்.

யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடை பெற்ற கொடிவாரம் மரம் நாட்டு விழாவுக்கு தலைமை தாங்கிய இக்கல்லூரி அதிபர் நாக. சண்முகநாதபிள்ளை உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் எமது முன்னோர்கள் சில வகையான மரங்களை மூலிகையாகவும் சஞ்சீவியாகவும் பயன்படுத்தி வந்தார்கள். மரங்களை வளர்த்தெடுப்பதன் மூலம் உணவுத்தேவைகளையும் பெறக்கூடியதாகவுள்ளது.

கல்லூரி மாணவர் தலைவர் திரு. ஜெகன்மோகன் முதல் கொடியை இக்கல்லூரி அதிபரும் இவ்விழாவின் தலைவருமான திரு. சண்முகநாத பிள்ளைக்கு வழங்கினார். 162

# பல்கலைக்கழக சட்டத்தில்

## திருத்தம் கொண்டுவர முடிவு

(கொழும்பு)

பல்கலைக் கழக சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவிருக்கிறது. திருத்தச்சட்ட மூலம் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஸ்தாபனத்தை அல்லது ஒரு கல்வி ஸ்தாபனத்தை அதன் நிர்வாக சபையின் அனுமதியுடன் உயர்கல்வி ஸ்தாபனமாக அங்கீகரிக்க திருத்தச் சட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு இதன்மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ)

இ. போ. ச.வில்

# படையினருக்கு விசேட ஆசன வசதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தத்தில் அங்கவீனம் அடையும் படையினருக்கு இலங்கை போக்குவரத்துப் பிரிவில் விசேட ஆசனங்கள் ஒதுக்கும்படி போக்குவரத்து அமைச்சர் திருமதி ஸ்ரீமானி அத்துலத்முதலி உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து பஸ்களிலும் ரயில்களிலும், யுத்தத்தில் அங்கவீனம் அடைந்த படையினருக்கு தற்போது விசேட ஆசனங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இது போன்ற விசேட ஆசனங்களை தனியார் பஸ்களிலும் அமைத்துக் கொடுக்கும்படி தனியார் போக்குவரத்துச் சபைகளிடமும் அமைச்சர் ஸ்ரீமானி வேண்டுகோள்விடுத்துள்ளார்;

வி சி

# இனப்பிரச்னை என்ற பூதத்தை வளர்த்து வீணான யுத்தத்தை நடாத்தியுள்ளனர்

(கொழும்பு)

''இந்தநாட்டில் இனப்பிரச்னை என்ற பெயரில், 17 வருட காலமாக ஒரு பூதத்தை வளர்த்து வீணாண ஒரு போர் நடத்தப்பட்டது அதனுல் ஆயிரக்கணக்காஞேர் பலியாகினர். நாட்டின் வளமும் வீணடிக்கப்பட்டது.''

ரூபவாஹினியில் புத்திஜீவிகளுடன் நடத்தடபட்ட கலந்துரையாடல் ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் உட்படப் பல துறைகளையும் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் பி.வசந்தராஜா இக்கலந்துரையாடலை நெறிப்படுத்தினுர்.

அந்தக் கலந்துரையாடலில் இனப் பிரச்னை தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட சில முக்கிய கருத்துக்கள் வருமாறு;

இனப் பிரச்னை என்று கூறிக்கொண்டும், பயங்கரவாதம் என்று முத்திரை குத்தியும் 17 வருட காலமாக ஒரு யுத்தம் நடத்தப்பட்டது. ஒரு சில அரசியல்வாதிகள் தமது அரசியல் லாபம் கருதியும் இந்த யுத்தத்தை நடத்திஞர்கள். வேறு சிலரோ ஆயுதக் கொள்வனவு மூலமும், வேறு வழியாலும் பெரும் தொகைப் பணத்தைக் கமிஷுகைப் பெற்றுப் பண முதலைகள் ஆகும் நோக்குடனும் இந்தயுத்தத்தை நடத்தினர்.

17 வருட காலத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமககள் கொல்லப்பட்டனர். இந்த நாட்டின் இரு பிரதான இனங்களுக்கும் இடையில் குரோதமும, இடைவெளியும், சந்தேகமும் வளர்ந்தது.

இதனுல் என்ன பயன் கண்டோம்? ஒன்றுமில்லை, ஆயுத விற்பனையாளர்கள் சொழுத்த பணம் சம்பாதித்தனர்.

இனக் கலவரம் என்றும், இனக் குரோதம் என்றும் இந்த நாட்டில் ஏதேதோ நடந்தது. ஆனுல் நாட்டு மக்கள் ஏமாளிகள் அல்லர். அவர்கள் புத்திசாலிகள். அவர்கள் இப்போது உண்மையை உணரத் தொடங்கிவிட்டனர்.

இந்த நாட்டில் யுத்தம் ஒன்று தேவையில்லை என்ற முடிவுக்கு அவர்கள் இப்போது வந்துவிட்டனர். திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவே அதற்குத் துணிச்சலுடன் அடி எடுத்துக் கொடுத்தார்.

இதனுல் தான் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும், அதன் பின்னர் இடம்பெற்ற ஜனுதிபதித் தேர்தலிலும் மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தனர்.

திருமதி சந்திரிகா பிரதமரானதும் இனப் பிரச்னை விவகாரம் தொடர்பாகத் துணிவுடன் மேற்கொண்ட சமாதான முயற்சிகளை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன், அதனை அங்கீகரித்தும் விட்டனர். போர் வேண்டாம். சமாதானம் வேண்டும் என்று இந்த நாட்டு மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு விட்டனர்.

இந்தப் பிரதிபலிப்பே கடந்த ஜனுதிபதித் தேர்தலில், திருமதி சந்திரிகா 20 லட்சத்துக்குர் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றதற்குக் காரணம்.

போருக்குச் சமாதி கட்டுவதற்கு இந்த நாட்டு மக்கள் எடுத்த முடிவுக்கு, இதை விடவும் வேறு ஒரு சான்று தேவையா?

(இ)

## வடக்கு — கிழக்கிற்கான நிவாரணபணிகளைபார்வையிட பிரிட்டிஷ் அமைச்சர் வருகிருர்

(கொழும்பு)

பிரிட்டிஷ்வெளியுறவு அமைச்சர் விரைவில இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

வடக்கு-கிழக்கு நிவாரணப் பணிகளுக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய உதவிகள் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறித்து ஆராயவும், இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக பொதுமுன்னணி அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை கண்டறிவதற்கும் மற்றும் பிரிட்டிஷ் - இலங்கை அரசுகள்உறவுகள்குறித்து அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடனும் பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கைவரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுமுன்னணிஅரசு பதவி ஏற்றபின் வெளிநாட்டு அமைச்சர் ஒருவர் இலங்கை வர விருப்பது இதுவே முதல் தடவை.

இலங்கை வெளியுறவுஅமைச்சர், வெவிநாட்டு விவகார சட்டத்துறை அரசியலமைப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் உட்பட மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் ஆகியோரை சந்தித்து பிரிட்டிஷ் அமைச்சர் பேச்வார்த்தைகளை மேற் கொள்வார்.

புதிய ஜனுதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவையும் அவர் சந்தித்து பிரிட்டிஷ் அரசின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வார் எனவும் கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

-இ

பண்டிதர் குடியிருப்பில்

## வார்ட் வச களுடன் மருத்துவ நிலையம்

(ஆனைப்பந்தி)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் அமைந்துள்ள மருத்துவ நிலையம் தற்போது ,வார்ட்' வசதியுடன் இயங்கி வருகின்றது. 12 கட்டில்களைக் கொண்ட வார்ட் மற்றும் சிகிச்சைப் பிரிவு, வெளி நோயாளர் பிரிவு, மருந்து கொடுக்கும் பிரிவு ஆகியவற்றுடன் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரியோடு சுகாதாரத் தொண்டர்கள் பத்துப்பேர் இந்நிலயத்தில் பணியாற்றி வருகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுல் அமைக்கப்பட்டஇம் மருத்துவ நிலையம் அண்மையில் தீவகக் கோட்ட மகளிர் அமைப்பின் பண்டிதர் குடியிருப்புப் பொறுப்பாளர் செல்வி கலைமதியினுல் திறந்து வைக்கப்பட்டது. 101

### சீருடைக்கான பணம்

(கொழும்புத்துறை)

போதனு வைத்திய சாலைகளில் பணிபுரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான சீருடைவழங்கும் முறை நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாகப் பணம் வழங்கப்படவுள்ளது.

இவற்றிக்குரிய பணம் ஒவ்வொரு வருட மார்ச் மாதத்திலும் வழங்கப்பட வேண்டும்மென கொழும்பு சுகாதாரத்திணைக்கள சுற்றுநிருபம் தெரிவிக்கிறது. (154)

## காமினியின் அனுதாப அலை

### சிறிமாவுக்கு கைகொடுக்கவில்லை

— கார்டியன் கூறுகிறது

(லண்டன்)

காமினியின் துணைவியரான திருமதி ஸ்ரீமா திஸாநாயக்கா தனதுகணவரின் மரணத்தினுல் ஏற்பட்ட அனுதாப அலையையே பெரிதும் நம்பியிருந்ததனுல் ஜனுதிபதியாகும்வாய்ப்பை கோட்டைவிட்டுவிட்டாரோ என லண்டன் 'கார்டியன்' பத்திரிகை தெரிவித்துளது,

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; நடைமுறைக்கு பொருந்தாத நிபந்தனைகளை திருமதி ஸ்ரீமா திசநாயக்கா விதித்ததேஅவர் விட்ட தவருகும். காமினி கோஷ்டி ரணில் கோஷ்டி என ஐ. தே. க. பிளவுண்டதும் ஐ. தே. க கட்சியின் தோல்விக்கு ஒரு காரணம்.

மேலும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனுதிபதிப்பதவிக்கு ஒரு மூடுவிழா நடாத்தும் முகமாக நடைபெற்று முடிந்த ஜனுதிபதி தேர்தல் அமைந்துள்ளதாகவும் 'கார்டியன்' தெரிவித்துள்ளது. கசி

### சுற்று நிருபத்தில் மாற்றம்

(மானிப்பாய்]

ஒய்வூதியத் திணைக்களத்திஞல் கடந்த 5-09-94 -ல் வெளியிடப்பட்ட 16-94 [1) இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தில் தற்பொழுது சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து யாழ். செயலகத்திற்கு கிடைத்த தகவலொன்றின் மூலம் இதுதெரிய வந்துள்ளது.

இதுசம்பந்தமான புதிய சுற்று நிருபமொன்று விரைவில் வெளிவருமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71-சி)

கிரிகெட்:

## முதல் தடவையாக இந்தியா வெற்றி

(புதுடில்லி)

இந்தியாவுக்கும், மே.இந்திய அணிக்குமிடையில் இதுவரை காலமும் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்தியா முதல் தடவையாக இம்முறை வெற்றி பெற்றுள்ளது.

இந்த இரு அணிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்தியா வெற்றி பெற்றதன் மூலம் 4-1 என்ற ரீதியில் இந்தியா இத்தொடரில் வெற்றி பெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கு 259 ஓட்டங்களைப் பெற்றது. ரெண்டுல்கர் சிறப்பாக ஆடி 105 ஓட்டங்களையும் விஞேத் ஹம்பிளி 67 ஓட்டங்களையும் பெற்றனர். மே. இந்தியா 49 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது. கூப்பர் 84 ஓட்டங்களைப் பெற்ருர்.

(வி-சி)

## சைவசமய அறிவு போட்டி முடிவு

(மானிப்பாய்)

இணுவில் சிவகாமி அருள் நெறி மன்றம் நவராத்திரிதின தினத்தை முன்னிட்டு வலயம் இரண்டிலுள்ள பாடசாலைரீதியாக நடாத்திய சைவசமய அறிவுப் போட்டியில் மானிப்பாய் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மேல்பரிவு மாணவிகள் 7 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் 1ம் இடத்தை ப. ரேவதியும், 2ம் இடத்தை க. தட்சாயினியும், 3ம் இடத்தை பொ. சிவசாந்தியும் பெற்றுள்ளதுடன் அதிவிசேட சித்தியில் சி. சயந்தினி, ப. மலர்விழி, சி. செந்தினி, தாரணி ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு மேற்படி அருள் நெறிமன்றம் அண்மையில் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தது. 71 சி

### சமயபாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபை ஆண்டுதோறும்நடாத்தி வரும் சைவ சமய பாடப்பரீட்சைஇன்றுஞாயிற்றுக்கிழமை காலை முதல் இடம்பெயர்ந்துள்ள காரைநகர்ப்பாடசாலைகளில் நடைபெறும்.

ஆண்டு3தொடக்கம் ஆண்டு 11 வரையில் சுமார் 1000 மாணவர்கள் தோற்றும் இப்பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெறும் மாணவர்க்கு அடுத்த மாதம் நடைபெறும் மணிவாசகர் விழாவில் தங்கப் பதக்கமும் சித்திபெறுவோருக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என மணிவாசகர் சபை செயலர் திரு. து. நாகேந்திரம் தெரிவித்துள்ளார். [சி]

### மரக்கன்றுகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானையிலுள்ள வலிகாமம் மேற்குப் பிரதேசச் செயலர் பணிமனையில், மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் ஆலயங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இலவசமாக மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

வீதியோரங்களிலும் மரக் கன்றுகள் நாட்டப்பட்டுவருகின்றன. மலைவேம்பு, சவுக்கு, புளி, வேம்பு, மருது போன்ற மரக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. (72)

## குன்றும் குழியுமான யாழ். நகர் வீதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் வீதிகள் யாவும் குன்றும்குழியுமாகக் காட்சி அளிக்கின்றன. இதனுல் வாகனங்களில் செல்வோரும், பாதசாரிகளும் பல சிரமங்களுக்கு மத்தியில் தமது பிரயாணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக, வீதிகள் யாவும் குன்றும்குழியுமாகியுள்ளன. வாகனங்கள் வீதிகளில் செல்லும்போது குழிகளில் விழுந்தெழுவதால், குழிகளில் தேங்கி நிற்கும் மழை நீர் தெறிப்பதனுல் பாதசாரிகள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்யவேண்டியுள்ளது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் இதனுல் பெரும் பாதிப்புக்குள்ளாவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(162-ரி-சி)

### மணிவாக்கு

ஏதாவது பேசியாக வேண்டுமே என்ற நிலை வரும்போது மனிதர்கள் எதை எதையோ பேசுகிறார்கள்.

- கண்ணதாசன்

# இலங்கை இனப்பிரச்னை குறித்து ஐரோப்பிய நாடுகளில் பொய் பிரசாரங்கள் நடந்தன

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவில் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வரும் இனப்பிரச்சனை ஐரோப்பிய நாடுகளில் திரிபு படுத்தப்பட்டு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு நடைபெறுவது பயங்கரவாதமென்றும், தீவிரவாமென்றும், பிரிவினைவாத மென்றும் திரிபுபடுத்தப்பட்டு ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்படும் பத்திரிகைகளில் அடிக்கடி பிரசுரமாகும் செய்திகளாகும், இது சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட பிரச்சாரமாகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு அண்மையில் நாடு திரும்பிய யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையின் முதன்மைக் குரு அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜேர்மனி, லண்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில் நடைபெற்ற முப்பதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகளில் கலந்து கொண்ட நான் சிறிலங்காவில் கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருவது ஒரு இனப் பிரச்சனையே தவிர பயங்கரவாதமோ அல்லது தீவிரவாத பிரச்சனையோ அல்ல என வலியுறுத்திக் கூறியுள்ளேன்.

இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு புதிய அரசுஎடுத்துவரும் துணிச்சலான முயற்சிகளை ஊக்குவிப்பதென ஐரோப்பிய நாடுகள் முடிவு செய்துள்ளன என்றும் இதன் அடிப்படையில் ஜேர்மன், பிரான்ஸ் இங்கிலாந்து போன்ற நாடுகள் இணைந்து இலங்கையில் நிலவி வரும் இனப் பிரசனைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் சமாதானத் தீர்வொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற பிரேரணை ஒன்றை ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு இனம் தனது சுயநிர்ணய உரிமையை நிலை நிறுத்துவதற்காக எடுத்து வரும் முயற்சிகளை, அர்ப்பணிப்புக்களை பயங்கரவாதமென விசமத்தனமான பிரசாரத்தை இலங்கை அரசு மேற்கொண்டு வந்த அதேவேளை வெளிநாடுகளிலிருந்து பயங்கர ஆயுதங்களையும் வாங்கியுள்ளது. இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படும் ஆயுத விற்பனை நிறுத்திக் கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டது.

நீண்டகாலமாக நடைபெற்று வரும் இப்போராட்டமானது இலகுவில் தீர்த்து வைக்கப்படலாம் எனக் கருதக் கூடாது. இது நிதானமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்தார். (162-சி)

### விவசாய உபகரணங்கள்

(கொழும்புத்துறை]

கொழும்பில் இருந்து ஹபரண கப்பலில் யாழ்.மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சமாசத்திற்கு விவசாய உபகரணங்கள் எடுத்துவரப்பட்டன.

அறுபது நீரிறைக்கும் இயந்திரங்கள், 100 தெளிகருவிகள் மற்றும் சிலபொருட்கள் கப்பலில் இங்கு வந்துள்ளன. (154)

### பாணுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாணுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவிவருகிறது. பொது மக்கள் தினமும் காலை, மாலை வேளைகளில் பேக்கரிகளில் நீண்ட கியூவரிசையில் நெடு நேரம் பாண்பெறுவதற்குக் காத்து நிற்பதைக்காணக் கூடியதாக உள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து கப்பல் மூலமமா எடுத்து வருவதற்கு ஏற்பட்டிருக்கும் தாமதமே இதற்குக் காரணமென கூறப்படுகிறது. 162

### ஆசிரியர்களுக்கு

(2ம் பக்கத் தொடர்ச்சி)

காப்புறுதித்திட்டத்தின் கீழ் ஆசிரியாகள் மருத்துவச் செலவினங்களுக்கென இருபத்திரண்டாயிரம் ரூபாவரையிலும், வைத்திய செலவினங்களுக்காக பத்தாயிரம் ரூபா வரையிலும் காப்புறுதி செய்து கொள்ள முடியும்.

மருத்துவக்காப்புறுதியை பெற்றுக்கொள்வதற்காக ஆசிரியர்கள் மாதாந்தம் நாற்பது ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும். -109

## நமது நோக்கு

### வீதி விபத்துகள்

வடபகுதியில் நிலவிய போர்க்காலச் சூழ் நிலையால் மிகவும் பாதிக்கப்பட்டவைகளில் ஒன்று பொது விதிகளாகும்.

நீண்ட காலமாகத் திருத்தப்படாத சில வீதிகள், மழை காலத்தில் மரணப் பொறிகளாக விளங்குவது வேதனைக்குரியதே.

இதேவேளை - தவிர்க்கக் கூடிய சில விபத்துகள் தொடருவது ஏன்?

துவிச் சக்கரவண்டிகளின் பாவனை அதிகரித்து விட்டது. பாடசாலைப் படிப்புப் போதாது என நினைத்துக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்குப் போவோர் தொகை அதிகரித்துவிட்டது.

அதனால் - குறிப்பிட்ட சில வேளைகளில் வீதிநிறையத் துவிச்சக்கரவண்டிகளின் ஆக்கிரமிப்பு அதிகரித்துக் காணப்படும். அவ்வேளைகளில் வீதி விதிகளைப் பலரும் அக்கறைப்படாத காரணத்தால், முட்டி மோதுவதும், தட்டி விழுவதும் நல்ல சுவையான காட்சிகள்!

முன்பு - வீதி விதிகள் பற்றிய விளக்கக் கூட்டங்கள் பாடசாலைகள் தோறும் ஒழுங்காக நடைபெற்றன.

இன்று - சிறுர்களுக்கு அந்த விதிகள்பற்றிய விளக்கம் கொடுப்பது யார் பொறுப்பு?

இன்று - பலரும் தமக்கு வசதியாகவே விதிகளை அமைப்பதும், முட்டி மோதியபின் வாக்குவாதப்படுவதும், தவறான விதிகளை வலியுறுத்தித் தமது அறியாமையை வெளிப்படுத்துவதும் வழக்கமாகிவிட்டது.

அதுமாத்திரமல்ல - தவறான விதிகளையே பிறருக்கு ஆலோசனைகளாக வழங்கும் பரிதாபகரமான நிலை உருவாகி வருகிறது

சமாந்தரமாகச் செல்வதும், வீதி முழுவதையும் ஆக்கிரமித்துச் செல்வதால், பல போக்குவரத்து இடையூறுகள் விளைவது மாத்திரமல்ல, விபத்துக்களுக்கே அவை வழி விடுகின்றன என்பதை உணராது சிலர் நடப்பது கண்டிக்கப்பட வேண்டியதே!

காவல்துறையினர் இது பற்றிக் கவனம் செலுத்த முன்வந்தது வரவேற்கத் தக்கதே. பொதுவிதிகளைப் பின்பற்றும் சமுதாய உணர்ச்சி, பிறர் நலம் பேணும் மனப்போக்கு வலியுறுத்தப்பட வேண்டியது அவசியமே!

பொதுமக்கள் இதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறோம்!

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-11-13 ஞாயிறு இரவு

08-01 இசைபரங்கம் நிகழ்ச்சியில்ரவி, ரஜிசகோதர்களின் நாதஸ்வர இசைக் கச்சேரி
08-30 செய்திகள்
08-40 தொடர்நாடகம் பொன் கணேசமூர்த்தி எழுதும் 'இலங்கைமண்' 47ம் அங்கம்
09-00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1994-11-14 திங்கள் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08·00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

### பலதும் பத்தும்

துளசி:

நோய் அரக்கனை விரட்டும் செடி என்ற கருத்துக் கொண்ட 'அபேத இராட்சசி' என்றே துளசியை வடமொழியில் அழைக்கிறார்கள்,

யேசுநாதரின் கல்லறையில் முளைத்ததாக நம்பி கிழைநாட்டு மாதா கோவில்களில் அந்த வழிபாடு இருந்து வருகிறதாம்!

ஜலதோஷம், மார்புச்சளி, அஜீரணம் ஆகியவற்றிற்கு அதன் சாறு கைகண்ட மருந்து,

அகமதபாத் நகரைச் சேர்ந்த வைத்திய நிபுணர் மனுபாய் வியாஸ் துளசி பற்றி ஆய்வு செய்து பல செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார். இருதய நோய், சிறுநீரக நோய்கள், ஆஸ்துமா போன்றவற்றிற்கு நிவாரணம் தரும் என்பது அவர் கருத்து.

இந்த விபரங்களை அனுப்பிய யாழ்ப்பாணம் வி. பிரான்சிஸ்கு நன்றி.

— மயூரன்

## இன்று

(கொழும்புத்துறை]

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் ஏகாதசி விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகள் இன்று 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். 154

0 0

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமறை மன்றத்தினது 18 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

0 0

[யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மூன்றுமணிக்கு தமிழ் எழுத்தாளர் பணிமனையில் நடைபெறும். இன்றைய பயிலரங்கை கே. சாம்பசிவமும் ஆய்வரங்கில் கடந்த வார தொடர் விரிவுரைகளை ப. கனகலிங்கம் எஸ். இராசதுரை, எஸ். பத்மநாதன் ஐ, வைத்தியநாதர் ஆகியோர் வழங்குவர், எஸ்

## இராசி பலன்

13 - 11 - 1994

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-27)

ஏகாதசி வைகறை 5-56 பூரட்டாதி காலை 6-44 சித்தாமிர்தயோகம், இராகு காலம் மாலை 4-36 முதல் 6-02வரை, சுபவேளை. காலை 6·04 முதல் 10-37 வரை

மேடம்: பங்காளிகள் துயர், தொழில் மந்தம், அலைச்சல்

இடபம்: ஊதிய உயர்வு, மனநிறைவு, குடும்பசுகம்

மிதுனம்; நண்பர் சகாயம், புதியதெம்பு, காரியசித்தி

கடகம்: மனத்தாங்கல், தொழில்பகை, அகால உணவு

சிங்கம்: வீண் துன்பம், பயணத்தடை, குடும்பப்பிரிவு,

கன்னி: விருந்தினர் வருகை, அதிகாரிகள் பெருமை, கலகலப்பு

துலாம்; முயற்சி வெற்றி' பணவரவு, கருத்தொற்றுமை,

விருச்சிகம்; மனச்சோர்வு, அபசகுனம், வைத்தியசெலவு

தனுசு: கடமை தவறுதல், பயனற்ற செயல், ஆவேசப் பேச்சு

மகரம்: பெரியோர் ஆசி, கீழ்ப்படிதல், மனைவி பெருமை

கும்பம்: குழம்பித்தெளிதல், பணத்தகராறு, மனக் கவலை

மீனம்: வெளியார் உபதேசம், கடன்வரவு, சமயோசித முடிவு.

— ஜோஸ்யர்

## அமைதி வேண்டி 45நாள் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

தொல்புரம் வடஇலங்கைச் சர்வோதயத்தின் ஆதரவில் சர்வோதய பிரார்த்தனை மண்டபத்தில் இரவு சத்திய சாயி பாபா பாசமித்தி அனுசரணையுடன்மக்கள் அமைதிசுபீட்சம் மனநிம்மதியுடன் வாழ இறை ஆசிவேண்டிப் பிரார்த்தனைகள் ஆரம்பமாகின.

இப்பிரார்த்தனைகளில் பத்து நிமிடம் மௌனம், பஜனை கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெறும்.

நவம்பர் மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர்ச்சியாக 45 நாட்கள் இப்பிரார்த்தனை இடம்பெறும் என எமதுசர்வோதய அமைப்பாளர் திரு. கி. நடராசா தெரிவித்துள்ளார். [154]

## யாழ். ஆஸ்பத்திரிகளுக்கு 12 ஜெனரேட்டர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில்உள்ள வைத்தியசாலைகளுக்கு மின்சார வசதிகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சு 12 ஜெனரேட்டர்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியுள்ளது.

மின்சார திணைக்கள யாழ். பிரிவு அதிகாரி ஒருவர் இது பற்றித் தெரிவிக்கையில், 750, 500, 250 குதிரைசக்தி கொண்ட 12 ஜெனரேட்டர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளன.

இந்த ஜெனரேட்டர் யாழ். மாவட்டத்தில் தற்போது மின்சார வசதியில்லாத வைத்தியசாலைகளுக்கு விரைவில் வழங்கப்பட இருப்பதாக தெரிவித்தார். (வி-சி)

யாழ். மாவட்ட

## அ. சா. நி, இணையத்தின் 4-வது ஆண்டு நிறைவு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நான்காவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 15-ந் திகதி நடைபெறவுள்ளது,

இவ்விழாவையொட்டி இணையத்தினர், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மாணவர்களுக்கிடையே கட்டுரைப் போட்டியினையும் சித்திரப்போட்டியினையும் நடத்தவுள்ளனர்.

ஒவ்வொரு முகாம்களிலும் உள்ள 15 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களிடையே போட்டிகள் நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றியீட்டும் முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. -109

தமிழீழ வளத்தின் தனித்துவக் குறியீடு பனை

# காமினியின் வீட்டிலிருந்து ரி. 56 ரக துப்பாக்கி மீட்பு

– ராணுவத்திலிருந்து தப்பியவரும் கைது –

[கொழும்பு]

காமினி திஸாநாயக்காவின் வீட்டிலிருந்து ரி-56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது!

கண்டி -தங்கொல்லயிலுள்ள காமினியின் வீட்டிலிருந்து கண்டி பொலிஸார் இந்த துப்பாக்கியை கண்டுபிடித்ததாகவும், ராணுவத்திலிருந்து தப்பிஓடிய ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதாக 'தினமின' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 16-ம் திகதி பொலிஸார் காமினியின் வீட்டை சோதனையிட்டபோது இந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதாகவும், சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. இ

# ஐ. தே. க, வினர் மீதான தாக்குதல் குறித்து ரணில் குற்றச்சாட்டு

[கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பரவலாகத் தாக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ. தே. கவின் ஆதரவாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டதாகவும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஐ. தே. கவின் இந்தக் குற்றச்சாட்டுகளை பாதுகாப்புத் துறையினர் நிராகரித்துள்ளனர். (இ-சி)

அமைச்சர்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சர்களை முன்னாள் அமைச்சர்கள் என்றே ரூபவாஹினி அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது. —சி

# அம்பாறை மாவட்டத்தில் பெரும் வெள்ளப் பெருக்கு

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சிலநாட்களாக பெய்த பெரும் மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது,

சம்மாந்துறை, நிந்தவூர், இறக்காமம், அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய பகுதிகளில் 15,000 ஏக்கருக்கு மேற்பட்ட நெல்வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

ஆலையடிவேம்பு, திருக்கோவில், அக்கரைப்பற்று என்பன உட்பட பல இடங்களில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தின் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியிருக்கிறார்கள். ரி சி

# காலி துறைமுகத்திற்கப்பால் கொரிய கப்பல் எரிகிறது!

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதிக் கடலில் கொரிய நாட்டுக் கப்பல் ஒன்று தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'மங்கோலியா, என்ற இந்தக் கப்பல் நேற்றுமுன்தினம் காலை தீப்பற்றி வெடித்ததாகவும் கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காலித் துறைமுகத்தில் இருந்து 15கடல் மைல் தூரத்தில் இந்தக் கப்பல் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இத்தீயை அணைக்கும் முயற்சியில் வேறு சில கப்பல்கள் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன [ம-சி)

# ஜனாதிபதி செயலராக பலபத்தபெண்டி நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க தனது செயலாளராக திரு. கே. பாலபத்தபெண்டியை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அவரால் வழங்கப்பட்ட முதலாவது நியமனம் இதுவாகும். திரு. பாலபத்தபெண்டி பிரதமரின் செயலாளராக முன்னர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை காலமும் முன்னாள் ஜனாதிபதிகளின் செயலராகக் கடமையாற்றிய திரு. கே. ஜே. எச். விஜயதாசா வேறு புதிய பதவி ஏற்று வெளிநாடு செல்லவுள்ளார். (ரி சி)

தமிழீழ மீட்புநிதி

[1ம் பக்கத் தொடர்ச்சி[

வழங்கப்படவுள்ளது.

மேலும் 90, 91, 92, 93ம் ஆண்டுகளில் மீளளிப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இதுவரை மீளப்பெறாதவர்களும் உரிய ஆவணங்களைக் கையளித்து அவர்களின் கடனை 94 மாவீரர் வாரத்தில் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

93 மார்கழி கடன் மீளளிப்பு பெறுவோர் விபரம் வருமாறு:

மார்கழி—1993

நல்லூர்

யா/ந/

349 420 517 602
921 960 3408 3494
4091 5515

யாழ்ப்பாணம்

யா/யா/

41 131 236 391
947 1732 2394 2624
3960

கோப்பாய்

யா/கோ/

69 539 679 989
1492 2143 4839 6069

உடுவில்

யா/உ/

246 534 2025 2137
2710

மானிப்பாய்

யா/மா/

204 569 748 815
916 925 3183

தெல்லிப்பளை

யா/தெ/

31 98 419 430
1663 1948 3361 4134

சங்கானை

யா/ச/

381 795 1184 1223
1864 2058 3260 3802

காரைநகர்

யா/கா

166 664

வேலணை

யா/வே/

94 297 995
1318 2145 2519

கரவெட்டி

யா/க/

32 173 348 440
580 873 946 1364
3416 4629

பருத்தித்துறை

யா/பரு/

06 49 293
540 882 1774 2735
3395

வடமராட்சி கிழக்கு

யா/வ கி/ 35 694

சாவகச்சேரி

யா சா

183 526 681 720
1667 1760 3124 3560
3647, 3978 5638 6226
.6329.

பச்சிலைப்பள்ளி

கி/ப/ 53

வெளியகல்வு

யா/வெ/

52 175 1094

[தொடரும்]

ரூபவாஹினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில்பத்திரிகையாளர்கள், ரூபவாஹினியை பொதுசன ஐக்கிய முன்னணி முறைகேடாகப் பாவித்தது என்று பரவலாக குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது அதற்கு உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்,

அவர் பத்திரிகையாளர் மகாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது; சமாதானப் பேச்சுவார்த்தைகள்தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன அத்தோடு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேலும் முன்எடுத்துச் செல்லப்படும் என்றார். ம-சி

தொடர்பு சாதனங்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குசெய்திருந்தார் என்றும் பத்திரிகையாளர்கள் சுமத்திய குற்றச்சாட்டுக்கு வசந்தராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்தக் குற்றச்சாட்டை தான் அவ்வளவு தூரம் அக்கறைப்படுத்தவில்லை எனவும் அவர் மேலும்கூறினார். ம-சி

பாதுகாப்பு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ற்கு காரணம் என்று ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான சரத் அமுனுகம பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தற்போது ரணில் விக்கிரமசிங்கா ஐ.தே.கவின் தலைமை பொறுப்பை ஏற்றுக்கின்றார் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் எமது கட்சியை அபிவிருத்தி செய்யும் நிலைக்குக் கொண்டுவர உள்ளோம்''என்றார். ம-சி

# 14,15ல் முதனிலை, இளநிலைத் தேர்வுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடாத்தும் முதனிலை, இளநிலைத் தேர்வுகள் நாளை திங்கட்கிழமையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் ஆரம்பமாகின்றன.

முதன் நிலைத் தேர்வுக்கான நேர அட்டவணை

| நாள் | மு.ப. 8.30—9.30 | மு.ப. 10.00—11.00 | மு.ப. 11.30 பி.ப. 12.30 |
|---|---|---|---|
| 14 11.94 திங்கள் | தமிழ் | ஆங்கிலம் | சமயம் |
| 15.11.94 செவ்வாய் | கணிதம் | சுற்றாடல் | — |

இத்தேர்வு நாடிகள் வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்.

இளநிலைத் தேர்வு முன்னர் வழங்கப்பட்ட நேர அட்டவணைப்படியே நடைபெறும். இத்தேர்வு நாடிகள் அனைத்துப் பாடங்களினதும் இரண்டாம் பகுதிக்கு விடை எழுத எழுது தாள்களையும், சித்திர பாடத்திற்குச் சித்திரத் தாள்களையும் தேர்வு நாடிகள் கொண்டு செல்லவேண்டும்.

பிரதமராக

[1ம் பக்கத் தொடர்ச்சி[

நாளை காலை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பிரதமராக பதவிப்பிரமாணம் செய்து கொள்வார். இதனையடுத்து அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொள்வார்கள்.

சிலவேளை அமைச்சரவை விஸ்தரிக்கப்படலாமெனவும் கூறப்படுகிறது. நாடாளுமன்றம் நாளை திங்கட்கிழமை கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

பி.பி.ஸி. மேலும்தெரிவித்துள்ளதாவது: புதிய ஜனாதிபதி பதவியேற்பு உறுதிமொழி செய்வதற்காக ஜனாதிபதி செயலகத்தை நோக்கிச் சென்ற பாதை எங்கும் பல நூற்றுக்கணக்கான படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவை தவிர பதவியேற்பு உறுதிமொழி வாசிக்கப்பட்ட கூடத்துக்குள் ஜனாதிபதியின் உறவினர்கள், ராஜதந்திரிகள், மந்திரி பிரதானிகள் என்று தெரிவு செய்த சிலரே அனுமதிக்கப்பட்டிருந்தவேளையிலும் அவர்கள் அனைவரும் முழுமையாக சோதனை செய்யப்பட்டிருந்தனர்.

ஜனாதிபதி தமது உரையில்: சமாதான முயற்சியை அரசு செவ்வனே ஆற்றுவதற்கு முப்படைகளினதும ஒத்துழைப்பு மிக அவசியமானதாகும் என்றார்.

அமைதிக்கான கேள்வி பற்றிப் பேசும்போது ஜனாதிபதி மிகவும் கவனமாக ஒன்றைச் சுட்டிக்காட்டினார். சிங்களப் பெரும்பான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டே அமைதி தேடப்படும் என்றும் எந்த விலை கொடுத்தும் அமைதி பெறப்படும். என்று அல்ல. மாறாக கண்ணியமான முறையில் வரும் அமைதியே ஏற்கப்படும் என்றும் தெரிவித்தார். (ரி-சி)

# 4 இந்திய மீனவர் இல. கடலில் மீட்பு

(கொழும்பு)

இயந்திரப் படகு கோளாறு காரணமாக இலங்கை கடற்பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

தற்போது இந்த நான்கு மீனவர்களும் தலைமன்னாரில் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் படகுகள் திருத்தப்பட்ட பின் இவர்களை இந்தியாவுக்கு திருப்பியனுப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கை கடற்படையினர் இதுகுறித்து கொழும்பில் உள்ள இந்திய தூதருக்கும் தகவல் அனுப்பியுள்ளனர். அவரும் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து வருகிறார், -சி

அடுத்த கட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி[

வார்த்தைகளை நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினரும் அங்கீகரித்துள்ளார்கள் என்பதை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டன. வடக்கு-கிழக்குப் பகுதி மக்களால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளை கைவிடுவதற்கு எந்தவித காரணமும் இல்லை. சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் தமது நிலைப்பாட்டை தெளிவாக தெரிவித்துள்ளனர். இதனால் சமாதானத்தை அடைய வேண்டும் என்ற எமது எண்ணம் மேலும் வலுவடைந்துள்ளது.

சமாதானத்தை அடைவது இலகுவான காரியமல்ல. பெரும்பான்மை சிங்கள சமூகத்தினதும் ஏனைய சமூகத்தினதும் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் சமாதானம் ஏற்படுவதற்குதான் எண்ணியிருக்கவில்லை எனவும் அவர் கூறினார். சி-ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது:

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.